n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

(பொருள்) ஒரு மாதத்தில் சொல்லப்படாத பல காலம் உபதேசிக்கப்பட்டதான இந்த கதையை கேட்பவர் களும், படிப்பவர்களும் எல்லாவித நன்மைகளையும் அடைவார்களென்று ஸூதர் பிராம்மனோத்தமரிடம் கூறினார்.

भूयश्च कद्रूशापेन नागेन्द्रास्तक्षकादयः ।
वल्मीकेश्वरमाराध्य कुशलेन ययुः पुरा ।। 60

பூயச்ச கத்ரூசாபேன நாகேந்த்ராஸ்தக்ஷகாதய: ।
வல்மீகேச்வரமாராத்ய குசலேன யயு: புரா ॥ 60

पुरा - முன்பு, कद्रूशापेन - கத்ருவின் சாபத்தினால், नागेन्द्राः - சர்ப்ப ராஜாக்களும், दक्षकादयः - தக்ஷகன் முதலான சர்ப்பங் களும், भूयः - பலதடவை (மீண்டும்), वल्मीकेश्वरं - புற்றில் தோன்றிய ஈசனை, आराध्य - வழிபட்டு, कुशलेन - க்ஷேமத்துடன், ययुः - நன்மைகளை அடைந்தார்கள்.

(பொருள்) கத்ருவின் சாபத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நாகங்களும், தக்ஷன் முதலானவர்களும் (மீண்டும்) பலவாறு வல்மீகேச்வரனை பூஜித்து நன்மை களை அடைந்தார்கள்.

तदहं श्रावयिष्यामि शृण्वन्तु मुनिपुङ्गवाः ।
तत् अहं श्रावयिष्यामि शण्वन्तु मुनिपुङ्गवाः ।। 61

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

ததஹம் ச்ராவயிஷ்யாமி ச்ருண்வந்து முனிபுங்கவா: ।
தத் அஹம் ச்ராவயிஷ்யாமி ச்ருண்வந்து முனிபுங்கவா: ॥ 61

तत्त - *அந்த (வரலாற்றை),* अहं - *நான்,* श्रावयिष्यामि - *நீங்கள் கேட்கும்படி சொல்கிறேன்,* मुनिपुङ्गवाः - *முனி ச்ரேஷ்டர்களே ! கேளுங்கள்.*

(பொருள்) நான் நீங்கள் கேட்கும்படி வரலாற்றை சொல்கிறேன். முனிச்ரேஷ்டர்களே கேளுங்கள் என்று கூறினார்.

इति श्रीब्रह्मकैवन्तै नागरखण्डे
अहीसकुटिमाहात्म्ये तृतीयोऽध्यायः ।

*இவ்வாறு ஸ்ரீப்ரம்ம கைவர்த்த பகுதியில்
நாகரகாண்டத்தில் அஹிஸகுடி மாஹாத்மியத்தில்
மூன்றாம் அத்தியாயம் முற்றும்.*

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

चतुर्थोऽध्यायः

நான்காம் அத்தியாயம்

पुरा तक्षककार्कोट धृतराष्ट्रादिपन्नगाः ।
कद्रूशापभवेद्विग्नाः कश्यपं शरणं गताः ॥ 1

புரா தக்ஷககார்கோட த்ருதராஷ்ட்ராதிபன்னகா: ।
கத்ரூசாபபவேத்விக்னா: கச்யபம் சரணம் கதா: ॥ 1

पुरा - முன்பு, तक्षककार्कोटधृतराष्ट्रादिपन्नगाः - தக்ஷகன், கார்கோடகன், த்ருதராஷ்டரன் முதலான ஸர்ப்பங்கள், कद्रूशापभवेद्विग्नाः - கத்ருவின் சாபத்தை நினைத்து வருந்தினாலும், कश्यपं - (சாப விமோசனத்திற்காக) கச்யபரை, शरणं गताः - சரணடைந்தார்கள்.

(பொருள்) தக்ஷகன், கார்கோடகன், த்ருதராஷ்ட்ரன் முதலான சர்ப்பங்கள் கத்ருவின் சாபத்திலிருந்து விமோசனம் பெற கச்யப முனிவரை (சாப விமோசனத்திற்காக) சரணடைந்தார்கள்.

प्रणम्य पादकमले फणामाणिक्यरोचिषा ।
नीराजयन्तः स्वगुरुं वाग्भिरर्थ्याभिरस्तुवन् ॥ 2

ப்ரணம்ய பாதகமலே பணாமாணிக்யரோசிஷா ।
நீராஜயந்த: ஸ்வகுரும் வாகரிரர்ப்யாபிரஸ்துவன் ॥ 2

पादकमले - திருவடித்தாமரைகளில், प्रणम्य - வணங்கி, फणामाणिक्यरोचिषा - படமெடுத்து தன் தலையில் உள்ள மாணிக்க ஒளியால், नीराजयन्तः - ஆரத்தி எடுத்தவர்கள், स्वगुरुम् - தன் குருவை, अर्थ्याभिः - வேண்டிக்கொண்டு, वाग्भिः - வாக்கினால், अस्तुवन् - துதித்தனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

(பொருள்) திருவடித்தாமரையாகிய பாதங்களில் விழுந்து வணங்கி, படமெடுத்து தன்னுடைய சிரசில் (தன் தலையில்) இருக்கும் மாணிக்கத்தின் ஒளியால் ஆரத்தி எடுத்து மனதார வேண்டிக்கொண்டும் தன் குருவை தன் வாக்கினால் மகிழ்ச்சியுடன் துதித்தனர்.

ततः कृतञ्जलिपुटाः विनयाः नम्रमूर्तयः ।
प्रशस्यापि नरं प्रोचुः भक्त्या च प्रणयेन च ।। 3

தத: க்ருதாஞ்ஜலிபுடா: விநயா: நம்ரமூர்த்தய: ।
ப்ரஸ்யாபி நரம் ப்ரோசு: பகித்யா ச ப்ரணயேன ச ॥ 3

ततः - பிறகு, कृताञ्जलिपुटाः - கைகூப்பியவாறு, नम्रमूर्तयः - வணங்கிய தலையுடனும், विनयाः - அடக்கத்துடனும், नरं - மனிதனை (குருன்வை), प्रशस्यापि - புகழ்ந்தவாறும், भक्त्या च - பக்தியுடனும், प्रणयेन च - வணக்கத்துடனும், प्रोचुः - கூறினார்கள்.

(பொருள்) சர்ப்பங்கள் கூப்பிய கரங்களும், வணங்கிய தலையுடனும், அடக்கத்துடனும், குருவை புகழ்ந்து கொண்டும் பக்தியுடனும், ஆராவாரம் செய்து, குருவின் அனுக்கிரஹத்துடன் அவ்வாறு சர்பங்கள் வணக்கத்துடன் நமஸ்காரம் செய்தார்கள். சர்ப்பங்கள் தன் குருவிற்கு மரியாதை செய்வது இச்சுலோகத்தில் கூறப்படுகிறது.

भगवत्करुणामूर्त्ते दृष्टलोकपरावर ।
शरणागतदीनार्तपरित्राणपरायण ।। 4

பகவத்கருணாமூர்த்தே த்ருஷ்டலோகபராவர ।
சரணாகததீனார்தபரித்ராணபராயண ॥ 4

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

भगवत्करुणामूर्ते–கருணாமூர்த்தியான பகவானே, दृष्टलोकपरावर-லோகத்தின் எல்லையை கண்டவரே, शरणागतदीनार्तपरित्राणपरायण-சரணடைந்தவர்களை கைவிடாமல் ரக்ஷிக்கும் தன்மை கொண்டவரே (வணங்குகிறோம்).

(பொருள்) கருணாமூர்த்தியான பகவானே ! உலகத்தின் எல்லையைக் கண்டவரே ! அனைத்து உலகையும் தன் மேனியில் தரித்துள்ளாய் ! பிறரை எதிர்க்கும் வலிமையால் மூவுலகும் அளந்த பெரியோனே! தன்னை சரணடைந்தவர்களை கைவிடாமல் ரக்ஷிக்கும் தன்மை கொண்டவரே ! நல்வர்களுக்கு மங்களத்தை அருள்பவருமான உன்னை வணங்குகிறோம்.

शापदावाग्निदग्धानामस्मकं त्वं गतिर्भव ।
माता हि प्रथमं दैवं सर्वतः परिपालनात् ।। 5

சாபதாவாக்னிதக்தாநாமஸ்மகம் த்வம் கதிர்பவ ।
மாதா ஹி ப்ரதமம் தேவம் ஸர்வத: பரிபாலனாத் ॥ 5

शापादावाग्निदग्धानाम् – சாபம் என்கிற காட்டுத்தீயால் சுட்டெரிக்கப்பட்ட, अस्माकं – எங்களுக்கு, त्वं – நீரே, गतिर्भव-அடைக்கலமாவீர், सर्वतः – எல்லா வகையிலும், परिपालनात् -காப்பாற்றக்கூடியவளாதலால், माता हि – தாயே, प्रथमं दैवं-முதன்மை கடவுளாக போற்றப்படுகிறாள்.

(பொருள்) சாபம் என்கிற காட்டுத்தீயால் சுட்டெரிக்கப்பட்ட எங்களுக்கு நீரே அடைக்கலம் ஆவீர். எல்லாவிதமான சூழ்நிலைகளிலும் தன்னலமற்று காப்பாற்றுபவளாக தாய் இருப்பதால் அவளே முதன்மை தெய்வமாக கருதப்படுகிறாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

तद्विरोधे दैवयोगात् पिता हि परमागतिः ।
सा स्वकार्यैकनिरता विपन्ना हि ततो वयम् ।। 6

தத்விரோதே தைவயோகாத் பிதா ஹி பரமாகதி: ।
ஸா ஸ்வகார்யைகநிரதா விபன்னா ஹி ததோ வயம் ॥ 6

तद्विरोधे - *தாயின் கருணை இல்லாதபோது,* दैवयोगात् - *இறைவனின் அருளால்,* पिता हि - *தந்தையே,* परमागतिः- *அடைக்கலம் ஆவார்,* सा हि - *அவள் (தாயாரானவள்),* स्वकार्यैकनिरता - *தன் கார்யம் தான் என்றிருந்தால்,* ततः - *பிறகு,* वयम् - *நாங்கள்,* विपन्नाः- *ஆபத்தில்லாமல் எப்படி இருப்பது.*

(பொருள்) தெய்வமாகப் போற்றப்படும் தாயே! எங்களுக்கு அனுகூலமில்லாமலிருந்தால் கடவுளின் அருளால் தந்தையே கதியாக இருப்போம். அந்த வகையில் தாயானவள் தன் கார்யத்திலேயே சிந்தையில்லாதவளாக இருப்பின் எங்களின் நிலை என்ன? தாயும் நீயே தந்தையும் நீயே ! எங்களை நீயே காப்பாற்றுவாயாக.

त्वं तात दुःखगहनात्त्रात्यगतिवर्जितान् ।

काश्यप उवाच –

भयं त्यजत् भो पुत्रा ज्ञात्वेदं दैवचेष्टितम् ।
कः स्वतन्त्र पुमान् लोके सर्वो दैवस्य किङ्करः ।। 7

காச்யப உவாச-

பயம் த்யஜத் போ புத்ரா ஞாத்வேதம் தைவசேஷ்டிதம் ।
க: ஸ்வதந்த்ர புமான் லோகே ஸர்வோ தைவஸ்ய கிங்கர: ॥ 7

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

काश्यप उवाच - *காச்யபர் கூறினார்* -

तात त्वं - *தந்தையான நீரே!* दुःखगहनात् - பெரும் ஆபத்திலிருந்து, अन्यगतिवर्जितान् - வேறு வழியில்லாத எங்களை, त्राति - காப்பாற்றுவீர், भो पुत्राः - ஹே! புத்திரர்களே, भयं त्यजत - பயத்தை விடுங்கள், दैवचेष्टितम् - இறைவனின் விளையாட்டு, इदं - இது என்று, ज्ञात्वा - தெரிந்துகொண்டு, लोके - உலகில், पुमान् सर्वो- மனிதன் எல்லோரும், दैवस्य - இறைவனுடைய, किङ्करः - தொண்டனே(அடியார்களே), कः स्वतन्त्र - யார் சுதந்திரன் (யாரும் சுதந்திரன் இல்லை).

(பொருள்) உங்களையே புகலிடமாக வந்துள்ள எங்களை தந்தையாகிய நீரே பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று வேண்டியவர்களுக்கு காச்யபர் கூறினார். இது இறைவனின் லீலை என்று தெரிந்துக் கொண்டு உலகில் எந்த மனிதனும் சுதந்திரர் இல்லை. ஆதலால் பயம் கொள்ளவேண்டாம் புத்திரர்களே. இந்த உலகத்தில் உள்ள இயங்குவன இயங்காதன போன்ற உள்ளவை அனைத்தும் இறைவனின் செயல் என்று கூறினார்.

मत्स्यानां वा जले मार्गं विधात् खे पक्षिणां तथा ।
स्त्रीणां चेतो गतिं विधात् न तु दैवचिकीर्षितम् ।। 8

மத்ஸ்யானாம் வா ஜலே மார்கம் விதாத் கே பக்ஷிணாம் ததா ।
ஸ்த்ரீணாம் சேதோ கதிம் விதாத் ந து தைவசிகீர்ஷிதம் ॥8

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

मत्स्यानां - மீன்களுக்கு, जले वा - நீரில்தான் (கதி), मार्गं - வழியிருக்கிறது(வாழ்க்கை), विधात् - என்று அறியலாம், खे - ஆகாயத்தில், पक्षिणां - பறவைகளுக்கு வழி, तथा - அப்படியே, स्त्रीणां - பெண்களுக்கு, चेतः - மனதே, गतिं - வழியானது என்று, न तु दैवचिकीर्षितम् - தெய்வத்தின் எண்ணமாகிற.

(பொருள்) மீன்களுக்கு நீரில்தான் (கதி) வாழ்க்கை. நீர் இல்லையென்றால் வாழ்க்கைக்கு வழியில்லை என்பது இறைவனின் படைப்பு. அதுபோல ஆகாயத்தில் பறவைக்கு செல்ல வழியில்லை எனில் பறவைகளுக்கும் வழியில்லை. அவ்வாறு பெண்களுக்கு மனதே வழியானது என்று கூறலாம். இறைவனின் படைப்புகள் அனைத்தும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நிலை உண்டு என்று கூறலாம்.

दैवप्रयत्नो नियतः सुखदुःखोदये नृणाम् ।
पौरुषात्कार्यसिद्धस्तु खपुष्पसमलङ्कृतिः ॥ 9

தைவப்ரயத்னோ நியத: ஸுகது:கோதயே ந்ருணாம் ।
பௌருஷாத்கார்யஸித்தஸ்து கபுஷ்பஸமலங்க்ருதி: ॥ 9

नृणाम् - மனிதர்களுக்கு, दैवप्रयत्नः - இறையருள் அல்லது அதிர்ஷ்டம் (விதி), सुखदुःखोदये - சுகதுக்கங்களுக்கு, नियतः- காரணம் நியாயமாகும் (இயற்கையானது), पौरुषात् - மனிதனின் முயற்சியால், कार्यसिद्धिस्तु - காரியத்தை முடிப்பேன் என்பது, खपुष्पसमलङ्कृतिः - ஆகாயத்தாமரையை அலங்கரிக்க முயல்வது போல.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

(பொருள்) மனிதர்களுக்கு தெய்வ பலம் அல்லது அதிர்ஷ்டம் என்பது நம்முடைய சுகதுக்கங்களுக்கு காரணமானது என்பது இயற்கை உலகில் இறைவனின் படைப்புகள் எல்லாம் வியப்பினைக் கொண்டதும் அது மனிதனுக்கு எல்லையில்லாத முயற்சியால் சாதிப்பேன் என்பது அவ்வாறு ஆகாயத்தாமரையால் அலங்கரிக்க முயல்வது போலாகும். இது இறைவனின் படைப்பாகும். இதுதான் இயற்கையின் நியதியாகும்.

फलं क्वचित् कदाचित् यत्काकतालीयमेव तत् ।
शुभाशुभात्मकं देवं वासना जनितं हि तत् ।। 10

பலம் க்வசித் கதாசித் யத்காகதாலீயமேவ தத் ।
சுபாசுபாத்மகம் தேவம் வாஸனா ஜனிதம் ஹி தத் ॥ 10

फलं - பலன் என்பது, क्वचित् - சில சமயம், कदाचित् - எப்போதாவது, यत् - எப்படி, काकतालीयमेव - அதாவது காக்கை உட்கார பனம்பழம் விழுந்தது போலவே, तत् हि - அப்படியே, शुभाशुभात्मकम् - நன்மை தீமைகளான, दैवम् - விதி(அதிர்ஷ்டம்) என்பது, वासना - கர்ம வாஸனையால் (வினைப்பயனால்), जनितम् - ஏற்படுவதே ஆகும்.

(பொருள்) பலன் என்பது சிலசமயம் எப்போதாவது காக்கை உட்கார பனம்பழம் விழுந்தது போல ஏற்படும். ஆனால் புண்ய, பாவங்களுக்கு தகுந்தாற்போல ஏற்படக்கூடிய பலமானது நன்மை, தீமைகளானது விதியோ ஆகும். முன் பிறவியில் செய்த வினைப்பயனால் ஏற்படுவதும் உண்டு. புண்ணியம், பாவங்களைப் பற்றியும் அதன் நற்பலன்களை பற்றியும் இச்சுலோகத்தில் கூறப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

वासना कर्मजनिता अविद्या तत्र कारणम् ।
सा सर्वेष्वपि भूतेषु वर्तते भव कारणम् ।। 11

வாஸனா கர்மஜனிதா அவித்யா தத்ர காரணம் ।
ஸா ஸர்வேஷ்வபி பூதேஷு வர்ததே பவ காரணம் ॥ 11

तत्र - அங்கு, वासना - வாசனை என்பது, कर्मजनि - வினைப்பயனால் ஏற்பட்டது, अविद्या - அதுவே அவித்யை, कारणम् - காரணமாக இருக்கக்கூடியது, सा - அந்த அவித்யை தான், सर्वेष्वपि - எல்லாவித, भूतेषु - உயிர்களின், भव कारणम् - நியாய சாஸ்த்திரத்தில் (வாழ்க்கைக்கு) காரணமாக, वर्तते - இருக்கிறது.

(பொருள்) வாஸனை என்பது வினைப்பயனால் இருக்கக்கூடியதாகும். அந்த அவித்யை உயிர்களில் நியாய சாஸ்த்திரங்களின் நற்பலன்களைப் பெறுவதே வினைப்பயனால் எல்லா உயிர்களின் முக்கிய காரணமாக விளங்குவது நற்பயனே ஆகும். அவ்வாறு புண்ணிய பாவங்களைத் செய்வது நற்பயனைப் பெறலாம்.

एवं संसारचक्रेऽस्मिन् भ्रमतः सत्समागमात् ।
भवेद्यदि महेशस्य कटाक्षः करुणानिधेः ।। 12

ஏவம் ஸம்ஸாரசக்ரேSஸ்மின் ப்ரமத: ஸத்ஸமாகமாத் ।
பவேத்யதி மஹேசஸ்ய கடாக்ஷ: கருணாநிதே: ॥ 12

एवं - இவ்வாறு, अस्मिन् - இந்த, संसारचक्रे - ஸம்ஸார சக்ரத்தில், भ्रमतः - சுற்றிக்கொண்டிருப்பவனுக்கு, सत्समागमात- நல்லவர்களின் சேர்க்கையால், यदि - எப்பொழுதாவது, करुणानिधेः - கருணைக் கடலான, महेशस्य - மஹேச்வரனுடைய, कटाक्षः - அனுக்கிரகம், भवेत् - ஏற்படுமேயானால்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

(பொருள்) சம்சார சக்கரத்தில் சுற்றிக்கொண்டு இருப்பவனுக்கு நல்லவர்களின் சேர்க்கையால் நாம் எப்பொழுதும் ஈச்வரனை நினைத்து நல்லவைகளே செய்யவேண்டும். அவ்வாறு கருணைக் கடலான மஹேச்வரன் உலக வறுமையைப் போக்கி உலக வாழ்க்கையில் மேலும் வளர நமக்கு அருள் கிட்டுமேயானால் பக்தி பரவசமுடன் மக்கள் காணப்படுவர்.

स तरेद्दुस्तरं दैवं नान्यथा विद्यते गतिः ।
तद्यूयं ज्ञापमुक्त्यर्थं पूज्यध्वं उमापतिम् ।। 13

ஸ தரேத்துஸ்தரம் தைவம் நாந்யதா வித்யதே கதி: ।
தத்யூயம் ஞாபமுக்த்யர்த்தம் பூஜ்யத்வம் உமாபதிம் ॥ 13

दुस्तरं - கடினமான கடக்க முடியாத, दैवं - விதியை, तरेत्- தாண்டிட, अन्यथा गति - வேறு மார்க்கமான, न विद्यते - இல்லவே இல்லை, तत् - அதனால், यूयं - நீங்கள், ज्ञापमुक्त्यर्तं - சாப விமோசனத்திற்காக, उमापतिम् - உமாபதியை, पूज्यध्वम् - பூஜை செயவீர்களாக.

(பொருள்) தாண்டுவதற்கு வேறு வழி இல்லை என்றால் வேறு வழி உள்ளனவா என்று பார்க்கும்போது அவ்வாறு கடக்க முடியாமல் இருக்கும்போது உலகத்தை காப்பவனான அந்த ஈச்வரனையும் அவர் துணைவியான உமாதேவியையும் சேர்த்து பூஜை செய்தோமானால் அந்த சாப விமோசனத்திற்கான பலன் நமக்கு கிட்டும். அவ்வாறு நாம் பக்தியுடன் செய்ய வேண்டும் வழி இல்லாததால் இறைவனே துணை என்று கூறுகிறோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

नागा ऊचुः –

शीघ्रं शिवप्रसादो नः कथं वास्यात् कृपानिधे ।
कस्मिन् क्षेत्रे कृता पूजा निर्विघ्ना फलदायिनी ।। 14

நாகா ஊசு: -

சீக்ரம் சிவப்ரஸாதோ ந: கதம் வாஸ்யாத் க்ருபாநிதே ।
கஸ்மின் க்ஷேத்ரே க்ருதா பூஜா நிர்விக்னா பலதாயினீ ॥ 14

नागाः ऊचुः – நாகங்கள் கூறின -

कृपानिधे – கருணைக்கடலே, शीघ्रं – சீக்கிரம், शिवप्रसादः – சிவனருள், नः – எங்களுக்கு, कथं वा स्यात् – எப்படி கிட்டும், कस्मिन् – எந்த, क्षेत्रे – க்ஷேத்திரத்தில், कृता पूजा – செய்யும் பூஜையானது, निर्विघ्ना – தடையின்றி, फलदायिनी – பலனைத் தரும்.

(பொருள்) கருணைக்கடலே ! உலகத்தின் நாயகனே சாபவிமோசனத்திற்காக சிவனருள் கிடைப்பதற்கு எந்த க்ஷேத்திரத்தில் செய்யக்கூடிய பூஜையானது தடையின்றி பலனைத்தரும் என்று கூறுங்கள் என்று கூறின. அவ்வாறு பூஜை செய்தால் நன்மை பயக்கும்.

कथं वा शरणं यातः शङ्करं लोकशङ्करम् ।
वदस्व तच्वतस्त्राहि सर्पसत्रमहाभयात् ।। 15

கதம் வா சரணம் யாத: சங்கரம் லோகங்கரம் ।
வதஸ்வ தச்வதஸ்த்ராஹி ஸர்பஸத்ரமஹாபயாத் ॥ 15

कथं वा - எப்படி, शरणं यातः – சரணடைவது, शङ्करं – சிவனை, लोकशङ्करम् – உலகத்திற்கு நன்மை செய்பவனை, तच्वतः – உள்ளபடி, वदस्व – சொல்வீர், सर्पसत्रमहाभयात् – ஸர்ப்ப ஸத்ர பயத்திலிருந்து, त्राहि – காப்பாற்றுவீராக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

(பொருள்) சங்கரனை உலகத்திற்கு நன்மை செய்பவனை சரணடைவதென்று உள்ளபடி சொல்ல வேண்டும். ஸர்ப்ப ஸத்ர பயத்திலிருந்து எங்களை காப்பாற்றுவீராக ! அந்த சங்கரனை பூஜை செய்வித்தால் அனைத்து நன்மை பலன் கிடைக்கும்.

काश्यप उवाच –

अहीशकुटिनामैकं क्षेत्रमादिरमापुरम् ।
तस्मिन्नादिविटङ्केशो लिङ्गे वल्मीकशांसिते ।। 16

காச்யப உவாச -
அஹீசகுடிநாமகைம் க்ஷேத்ரமாதிரமாபுரம் ।
தஸ்மின்னாதிவிடங்கேசோ லிங்கே வலிமீகசாம்ஸிதே ॥ 16

काश्यप उवाच – *காச்யபர் கூறினார்*

अहीशकुटीनाम – அஹீசகுடி என்ற பெயரையுடைய, एकं- ஒரு, क्षेत्रं – க்ஷேத்ரமானது, आदिरमापरम् – முன்பு ரமாபுரமாக (லக்ஷ்மி அருள் பெற்ற இடமாக) இருந்தது, तस्मिन् – அந்த க்ஷேத்திரத்தில், आदिविटङ्केशः – ஆதி விடம் என்ற ஈசன், लिङ्गे - லிங்க உருவில், वल्मीकशांसिते – புற்றில் அவதரித்தது பெருமையாக பேசப்பட்டது (வல்மீகேசன்).

(பொருள்) அஹீசகுடி என்ற க்ஷேத்திரமானது முன்பு ஸ்ரீபுரமாக விளங்கப்பெற்று பிறகு அந்நகரம் சிறப்புற திகழ்ந்தது. பின்பு புற்றில் ஈசன் லிங்க வடிவில் தோன்றியதால் இறைவனுக்கு வல்மீகேசனாக இச்க்ஷேத்திரமானது பேசப்பட்டது. இவ்வாறானது இறைவன் முதல் அருள் பெற்ற இடமாக திகழ்ந்தது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

सदा सन्निहितो भक्तवाञ्छितान्पूरयत्यसौ ।
निमिषार्धं वसन्नादि कमलानगरेऽध्वगः ॥ 17

ஸதா ஸன்னிஹிதோ பக்தவாஞ்சிதான்பூரயத்யஸௌ ।
நிமிஷார்த்ம் வஸன்னாதி கமலாநகரேத்வக: ॥ 17

असौ – இந்த மஹாதேவன், सदा – எப்பொழுதும், सन्निहितोभक्तः – அருகிலேயே இருக்கக்கூடிய பக்தன், वाञ्छितान् – விரும்பியதெல்லாம், पूरयति – நிறைவேற்றுபவன் ஆதலால், निमिषार्धम् – அரை நிமிடமாவது, आदिकमलानगरे – முதன்மையான கமலா நகரத்தில், वसन् – வசித்துக்கொண்டு, अध्वगः – பூஜை செய்யவும்.

(பொருள்) மஹாதேவன் எப்பொழுதும் அருகிலேயே இருக்கக்கூடிய பக்தன் தான் விரும்பியதை எல்லாம் நிறைவேற்றுபவன் ஆதலால் அந்த பக்தியுடன் இருந்தால் நாம் இறைவனைக் காணலாம். இவ்வாறு இறைவனைக் காணும்போது அவ்வாறு நமக்கு அரை நிமிடமாவது முதன்மையான கமலா நகரத்தில் வசித்து பூஜை செய்யவும்.

यत्र क्वापि वसन्नित्यं काशीवासफलं लभेत् ।
गीतवाद्यानुरक्तो वा रमणीरमणोत्सुकः ॥ 18

யத்ர க்வாபி வஸன்னித்யம் காசீவாஸபலம் லபேத் ।
கீதவாத்யானுரக்தோ வா ரமணீரமணோத்ஸுக: ॥ 18

यत्र क्वापि – எங்கேயாவது எப்படிப்பட்ட நிலையிலும், वसन् – வாசம் செய்தாலும், नित्यं – எப்போதும், काशीवासफलम् – காசியில் வாசம் செய்யும் பலனை, लभेत् – அடைவான், गीतवाद्यानुरक्तो वा – கீதம், வாத்யம் இவைகளை கேட்டு மூழ்கியிருந்தாலும், रमणीरमणोत्सुकः – மனைவியுடன் சந்தோஷத்துடன் இருந்தாலும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

(பொருள்) எங்கேயாவது இருந்தாலும் எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் வாசம் செய்தாலும், எப்போதும் காசி க்ஷேத்திரத்தில் நித்ய வாசம் பண்ணிய பலனை அடைகிறான். கீதம், வாத்யம் முதலியவைக் கேட்டுக்கொண்டு பிரியமான மனைவியுடன் சந்தோஷித்திருந்தாலும் காசி க்ஷேத்திரத்தில் கிடைத்த பலன் கிட்டும்.

गत्वा वल्मीकसदनं नरो मुक्तिमवाप्नुयात् ।
श्रीमानादिविटङ्केशः त्यागराजो हरिप्रियः ।। 19

கத்வா வல்மீகஸதனம் நரோ முக்திமவாப்னுயாத் ।
ஸ்ரீமானாதிவிடங்கேச: த்யாகராஜோ ஹரிப்ரிய: ॥ 19

वल्मीकसदनं – வல்மீகஸதனம், गत्वा – சென்று (செல்பவன்), नरः – மனிதன், मुक्तिम् – மோக்ஷத்தை, अवाप्नुयात् – அடைகிறான், श्रीमानादिविटङ्केशः – ஆதிவிடங்கநாதன், त्यागराजः – தியாகராஜன், हरिप्रियः – விஷ்ணுவிற்கு பிரியமானவன் அன்றோ.

(பொருள்) விஷ்ணுவின் பிரியனான ஸ்ரீமாந் ஆதிவிடங்கேசன் என்ற தியாகராஜன் வீற்றிருக்கக்கூடிய வல்மீக ஸதனம் சென்று மனிதனின் முக்தியைப் பெறலாம். அவ்வாறு தியாகராஜன் அத்தலத்தில் முக்தி பெறலாம் என்று அவன் இடத்தில் சரணமடையலாம். அவ்வாறு அந்த க்ஷேத்திரமானதும், "பிறப்பிற்கு முக்தி தரும்" தலமாகும்.

सुरराजार्चिता लक्ष्मीर्वाञ्छितार्थफलप्रदः ।
अहीशदिव्याभरणो मङ्गलाम्बा मनोहरः ।। 20

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

ஸுரராஜார்சிதா லக்ஷ்மீர்வாஞ்சிதார்த்தபலப்ரத: ।
அஹீசதிவ்யாபரணோ மங்கலாம்பா மனோஹர: ॥ 20

सुराजार्चिता - தேவேந்திரனால் பூஜிக்கப்பட்ட, लक्ष्मीः - லக்ஷ்மி இருக்கக்கூடிய, वाञ्छितार्थफलप्रदः - விரும்பியதை கொடுக்கக் கூடியவனாகவும், अहीशदिव्याभरणः - திவ்யாபரணங்களை தரித்துக்கொண்டிருக்கும் அஹீசன், मङ्गलाम्बा - மங்களாம்பிகையுடன், मनोहरः - மனதை கவரக் கூடியவனாக வீற்றிருக்கிறான்.

(பொருள்) தேவேந்திரனால் பூஜிக்கப்பட்ட லக்ஷ்மீ வாஸம் செய்யும் கமலாபுரத்தில் விரும்பியதை கொடுக்கக்கூடிய திவ்ய நகைகளை அணிந்தும் மங்களாம்பிகையுடன் மனதைக் கவரக்கூடியவனாக அந்த மஹாதேவன் வீற்றிருக்கிறான். அவ்வாறு விரும்பியதைக் கொடுக்கக்கூடிய வல்லமைக் கொண்டவனாவான்.

वाल्मीकिपूजितो विद्यानिधिर्योगी जनाश्रियः ।
स्वभावकरुणामूर्त्ति नामन्येकादशादरात् ।। 21

வால்மீகிபூஜிதோ வித்யாநிதிர்யோகீ ஜனாச்ரிய: ।
ஸ்வபாவகருணாமூர்த்தி நாமன்யேகாதசாதராத் ॥ 21

वाल्मीकिपूजितः - வால்மீகி முனிவரால் பூஜிக்கப் பட்டவரும், विद्यानिधिः - வித்யாநிதியாகவும், योगी - யோகியாயும், जनाश्रियः - ஜனப்ரியராகவும், स्वभावकरुणामूर्त्ति - இயற்கையில் கருணாமூர்த்தியாகவும், एकादशनामनि - பதினொன்று நாமாவளியால், आदरात् - கொண்டாடக் கூடியவராகவும் வீற்றிருக்கிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

(பொருள்) வால்மீகி மஹரிஷியால் (முனிவரால்) பூஜிக்கப்பட்டவரும் வித்யாநிதியாகவும் யோகியாகவும், ஜனங்களுக்கு ஜனப்பிரியனாகவும் சுபாவத்தில் கருணை கடலான கருணாமூர்த்தியாகவும் பதினோரு நாமாக்களால் கொண்டாடப்படுபவராகவும் (ஏகாதச ருத்ரர்) இருந்து அருள்பாலிக்கிறார். அவ்வாறு எல்லாம் வல்லவராகவும் விளங்குகிறார்.

राजद्वारे विवादे च संग्रामे दुर्गमेपथि ।
दुःस्वप्ने दुर्निमित्ते च यः पठेदिति संयुतः ।। 22

ராஜத்வாரே விவாதே ச ஸம்க்ராமே துர்கமேபதி ।
துக்கஸ்வப்னே துர்நிமித்தே ச ய: படேதிதி ஸம்யுத: ॥ 22

राजद्वारे - ராஜத்வாரத்தில், विवादे च - விவாதம் நடக்குமிடத்தில், संग्रामे - சண்டை நடக்குமிடத்தில், दुर्गमे - போக முடியாத (கடக்க முடியாத), पथि - வழியில், दुःस्वप्ने - கெட்ட கணவு கண்டபோது, दुर्निमित्तो च - கெடுதல் ஏற்படும்போதும், यः - எவன், संयुतः - ஒரு மனதுடன், पठेत् - படிக்கிறானோ, इति - என்று.

(பொருள்) ராஜதுவாரத்தில் விவாதம் நடக்குமிடத்தில், சண்டை நடக்குமிடத்திலும், கடக்க முடியாத, ஆபத்தான வழியிலும், கெட்ட கனவு, கெட்ட காரியம் முதலியவை ஏற்படுமாயின் எவன் ஒருவன் ஒருமனதுடன் சிந்திக்கின்றானோ, எவன் படிக்கிறானோ அவன்தான் சாதிக்க முடியும். அதில் அவன் வெற்றி அடைவான். எவ்வழியாக இருந்தாலும் அவன் வெற்றி பெறுவதற்குரிய வழியில் சென்று வெற்றி பெறுவான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

स भवेत् विजयी शीघ्रं दुरितानि इतरेदपि ।
वल्मीकेश त्यागराज मङ्लारमणा इति च ।। 23

ஸ பவேத் விஜயீ சீக்ரம் துரிதானி இதரேதபி ।
வல்மீகேச த்யாகராஜ மங்கலாரமணா இதி ச ॥ 23

(பொருள்) பாவங்களினின்றும் விடுபட்டும், (சீக்கிரமாக) உடனடியாக வெற்றியை உடையவனாகவும் வல்மீகேச ! தியாகராஜ ! மங்களாசாசனம் செய்து எப்பொழுதும் பக்தியுடனும், அர்ச்சனை, அபிஷேகம் செய்வித்து அவ்வாறு இறைவவனைத் துதி செய்பவன் எவனோ ! அவன் இவ்வுலகத்தில் பாவங்களில் விடுபட்டு எவ்வழியிலும் அவன் வெற்றியுடையவனாவான். இறைவனை மனதில் நினைத்தால் நமக்கு நற்பலன் கிட்டும்.

जपेन्नामत्रयं प्रातः सर्वमङ्गलसाधनम् ।
सदेवो भक्तिसुलभः शीघ्रमेव प्रसीदति ।। 24

ஜபேன்னாமத்ரயம் ப்ராத: ஸர்வமங்கலஸாதனம் ।
ஸதேவோ பக்திஸுலப: சீக்ரமேவ ப்ரஸீததி ॥ 24

प्रातः - தினமும் காலையில், नामत्रयं - இந்த நாமங்களையும், सर्वमङ्गलसाधनम् - எல்லா நன்மைகளையும் கொடுக்கக்கூடிய காரணமான இவைகளை, जपेत् - (எவன்) ஜபிக்கிறானோ, स देव - (அவனுக்கு) அந்த தேவன், भक्तिसुलभः - பக்தி சுலபனாய், शीघ्रमेव - சீக்கிரமாகவே, प्रसीदति - அருள்புரிவான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

(பொருள்) எல்லா நன்மைகளுக்கும் கொடுக்கக் கூடிய நாமங்களையும் நாம் தினமும் காலையிலும், மாலையிலும் உச்சரிக்க வேண்டும். அவ்வாறு உச்சரிக்கும்போது நமக்கு சர்வ மங்களமான எல்லாவித நன்மைகளையும் கொடுக்கக்கூடிய இவைகளை நாம் ஜபிக்கின்றோம். அப்போது அந்த தேவன் நமக்கு அருள் புரிவான். அவ்வாறு நாம் நாமங்களை உச்சரிக்கும்போது இறைவன் அருள் நமக்கு கிட்டும்.

तत्प्रसादेन युष्माकं श्रेष्टानां नम वेद्भयम् ।
ततस्तत्क्षेत्रमासाद्य तीर्थे स्नात्वा यथाविधि ।। 25

தத்ப்ரஸாதேன யுஷ்மாகம் ச்ரேஷ்டானாம் நம வேத்பயம் ।
ததஸ்தத்க்ஷேத்ரமாஸாத்ய தீர்த்தே ஸ்னாத்வா யதாவிதி ॥ 25

तत्प्रसादेन - அவனருளால், युष्माकं - உங்களுக்கு, श्रेष्टानां - நல்லவர்களுக்குச் செய்ய, नम - நமஸ்காரத்தால், वेद्भयम् - பயம் நீங்கிவிடும், ततः - பிறகு, तत्क्षेत्रमासाद्य - அந்த க்ஷேத்திரத்தை அடைந்து, तीर्थे - தீர்த்தத்தில், स्नात्वा - நீராடி, यथाविधि - முறைப்படி பூஜிக்கவும்.

(பொருள்) நீங்கள் நல்லவர்களின் நமஸ்காரத்தாலும், பயத்தை போக்கி அவ்வாறு அந்த க்ஷேத்திரத்தை அடைந்து தீர்த்தத்தில் நீராடி நம்முடைய பாவங்களையும், பயத்தையும் போக்கி அந்த க்ஷேத்திரத்தில் முறைப்படி பூஜை செய்யவும். அவ்வாறு செய்யும்போது நமக்கு புண்ணிய பலன் கிடைக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

त्रिकालपूजनिरताः भविष्यध्वमतन्द्रिताः ।
यावत्प्रसादनेकाग्रहृदयनियतव्रताः यूयम् ।। 26

த்ரிகாலபூஜநிரதா: பவிஷ்யத்வமதந்த்ரிதா: ।
யாவத்வப்ரஸாதநேகாக்ரஹ்ருதயநியதவ்ரதா: யூயம் ॥ 26

त्रिकालपूजनिरताः - முக்காலமும் பூஜையில் ஈடுபாடு, अतन्द्रिताः - சோம்பலின்றி, भविष्यत्वं - இருப்பீர்களாக, यावत्प्रसादम् - அவனருள் கிட்டும் வரை, एकाग्रहृदयनियतव्रताः - மனதை ஒரு நிலைப்படுத்தி விரதம் செய்பவர்களாக, यूयम् - நீங்கள் இருங்கள்.

(பொருள்) முக்காலமும் பூஜையில் ஈடுபட்டு இறைவன் அருள் கிட்டும்வரை நாம் பூஜை, அர்ச்சனை, அபிஷேகம் முதலியவை செய்து இறைவனை நினைத்து தீர்த்தத்தில் நீராடி பிறகு மனதை ஒருநிலைப்படுத்தி விரதம் இருந்து இறைவனின் அருள் பெறுவீர்களாக ! இறைவனை துதி செய்து நாம் நமஸ்காரம் செய்வித்தால் ஈச்வரனின் அருள் நமக்கு கிட்டும்.

भूत्वा क्रियाफलं प्राप्य पुनरेवाथपुत्रकाः ।
स्नानेन पूजयन्नास्ते त्रिकालमभिवादनैः ।। 27

பூத்வா க்ரியாபலம் ப்ராப்ய புனரேவாதபுத்ரகா: ।
ஸ்னானேன பூஜயன்னாஸ்தே த்ரிகாலமபிவாதனை: ॥ 27

भूत्वा - விரதம் செய்துகொண்டு, क्रियाफलं - செய்ததின் பலனை, प्राप्य - அடைந்து (பெற்று), पुनरेवाथ - மீண்டும் புத்திரன் முதலான செல்வம் பெற்று, स्नानेन - ஸ்நானம் செய்தாலும், पूजयन् - பூஜித்துக்கொண்டும், त्रिकालाभिवादनैः - முக்கால அபிவாதனத்தினாலும், आस्ते - இருப்பீர்களாக !

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

(இ-ள்.) விரதத்தை கடைப்பிடிப்பதன் மூலம் செல்வங்கள், போன்றவை நமக்கு கிட்டும். அவ்வாறு விரதம் இருந்தால் நாம் நற்பலனையும் அடையலாம். விரதம் கடைப்பிடிப்பதின் பலனாக நமக்கு இறைவன் அருள் என்றும் கிட்டும். அவ்வாறு மூன்று காலமும் நமஸ்காரத்தாலும், ஸ்னானத்தினாலும் பூஜை செய்து கொண்டு இருப்பீர்களாக !

मौनादि नियमैः सिद्धिर्दिनैः कतिपयैः भवेत् ।

மௌனாதி நியமை: ஸித்திர்தினை: கதிபயை: பவேத் ।

सूत उवाच - சூதர் கூறினார்

मौनादि नियमैः - மௌனம் முதலான நியமங்களால், कतिपयैः दिनैः - சில தினங்களில், सिद्धिः - சித்தியானது, भवेत् - ஏற்படும்.

(பொருள்) சூதர் கூறினார். மௌனம் முதலான நியமங்களைக் கடைப்பிடிப்பதால் நமக்கு சில நன்மைகள் உண்டாகும். இவ்வாறு சில தினங்களில் காணப்படும் சித்தியானது ஏற்படும். எல்லாவித நன்மைகள் உண்டாக சிவ பூஜைகள் செய்துகொண்டு இருப்பீர்களாக!

अनुशास्य पिता पुत्रानाशिषातान् असर्जयत् ।
ते प्राप्य चोलदेशे श्रीकावेरी पुण्यरोधसि ।। 29

அனுசாஸ்ய பிதா புத்ரானாசிஷாதான் அஸர்ஜயத் ।
தே ப்ராப்ய சோலதேசே ஸ்ரீகாவேரீ புண்யரோதஸி ॥ 29

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

पिता - தந்தை, पुत्रान् - பிள்ளைகளை, आशिषा - ஆசீர்வதித்து, तान् - அவர்களை, ते - அவர்கள், प्राप्य - ஆசிகள் பெற்று, चोलदेशे - சோழ தேசத்தில், श्री कावेरी - ஸ்ரீகாவேரி, पुण्यरोधसि - புண்ய க்ஷேத்திரத்தில் அருள் புரிவார் என்பதை, अनुशास्य - சொல்லி, असर्जयत् - இருந்திடச்செய்தார்.

(பொருள்) தந்தை, பிள்ளைகளை ஆசீர்வதித்து அந்த ஆசீர்வாதத்தால் அவர்களை சோழ தேசத்தில் ஸ்ரீ காவேரியில் தான் புண்ணிய நதிகளில் ஆசி பெற்று அவ்வாறு புண்ணிய க்ஷேத்திரத்தில் அருள் புரிவர் என்பதைச் சொல்லி இருந்திடச் செய்தார்.

कमलालयमाद्यं तत्तीर्थराजविराजितम् ।
गुरुपदिष्टमार्गेण नियमैनिशितैरपि ।। 30

கமலாலயமாத்யம் தத்தீர்த்தராஜவிராஜிதம் ।
குருபதிஷ்டமார்கேண நியமைநிசிதைரபி ॥ 30

आद्यम् - முதலில், कमलालयं - கமலாலயத்தையும், तत्तीर्थराजविराजितम्- அந்த தீர்த்த பிரகாசிப்பவனையும், गुरुपदिष्टमार्गेण- குரு(உபதேசித்த) காட்டின வழியில், नियमैनिशितैरपि- கடுமையான நியமங்களுடன் பூஜை செய்ய வேண்டும்.

(பொருள்) புண்ணிய க்ஷேத்திரமான கமலாலயத்தையும் அந்த தீர்த்த ராஜாவாக பிரகாசிப்பவனையும், குருவினால் காண்பிக்கப்பட்ட வழியில் நியமங்களுடன் பூஜை (செய்யுங்கள்) அவ்வாறு செய்யும் போது நமக்கு எல்லாவித நன்மைகளும், புண்ணியமும் உண்டாகும். கமலாலயதீர்த்தத்தில் நீராடினால் எல்லா நியமங்களுடன் நன்மைகளும் உண்டாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

पूजयन्तस्तपस्तीव्रमातिष्टन्नुरगोत्तमाः ।
तत्र श्रीमङ्गलाम्बेशः प्रसन्नः सुरनायकः ।। 31

பூஜயந்தஸ்தபஸ்தீவ்ரமாதிஷ்டன்னுரகோத்தமா: ।
தத்ர ஸ்ரீமங்கலாம்பேச: ப்ரஸன்ன: ஸுரநாயக: ॥ 31

उरगोत्तमाः – நாகசிரேஷ்டர்கள், तीव्रं – கடுமையான, तपः- தவத்தை, आतिष्टन् – செய்தும், पूजयन्तः – பூஜித்துக்கொண்டும் இருந்தார்கள், तत्र – அங்கு, सुरनायकः – தேவதேவன், श्रीमङ्गलाम्बेशः – ஸ்ரீமங்களாம்பேசன், प्रसन्नः – பிரஸன்னமானாரர்.

(பொருள்) நாக சிரேஷ்டர்கள் கடுமையான பக்தி கொண்டும், தவம் செய்துகொண்டும், பூஜித்துக் கொண்டும் இருந்த சமயத்தில் அங்கு மங்களாம்பிகேசனான தேவதேவன் தோன்றினார். நாக சிரேஷ்டர்களின் பூஜையினால் தேவனுக்கு தேவன் தோன்றினார்.

ददृशुस्तं महानागाः सर्वदेवेश्वरं शिवम् ।
उमाकराम्बुजन्यस्त निजहस्तसरोरुहम् ।। 32

தத்ருசஸ்தம் மஹாநாகா: ஸர்தேவேச்வரம் சிவம் ।
உமாகராம்புஜன்யஸ்த நிஜஹஸ்தஸரோருஹம் ॥ 32

महानागाः – அந்த நாகங்கள், सर्वदेवेश्वरं – எல்லா தேவர்களுக்கும் தலைவனை, शिवम् – சிவனை (எப்படிப் பட்ட), उमाकराम्बुजन्यस्त – பார்வதியின் தாமரை போன்ற திருக்கையில், निजहस्तसरोरुहम् – உண்மையான தாமரை இருக்கக்கூடிய கைகளையுடைய பார்வதியுடன் சிவனை, तं – அப்படிப்பட்ட சிவனை, ददृशुः – கண்டார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

(பொருள்) மஹா நாகங்கள் எல்லா தேவர்களுக்கும் தலைவனான மஹாதேவனை பார்வதியின் தாமரைப் போன்ற கைகளையுடைய உண்மையான தாமரை இருக்கக்கூடிய கைகளை உடைய பார்வதியோடு அந்த சிவனை (ஈச்வரனை) கண்டார்கள்.

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

अपारकरुणासिन्धुमाश्रितामरपादपम् ।
तुष्टुवुर्वाग्भिरर्भ्याभिर्भक्तया परमयायुतः ।। 33

அபாரகருணாஸிந்துமாச்ரிதாமரபாதபம் ।
துஷ்டுவுர்வாக்பிரர்ப்யாபிர்பக்தயா பரமயாயுத: ॥

अपारकरुणासिन्धुं - எல்லையற்ற கருணைக்கடலும், आश्रितामरपादपम् - தேவவ்ருக்ஷத்தின் நிழலை உடைய சிவனை, परमया भक्तया युताः - மிகுந்த பக்தியுடன் சேர்ந்து, अर्भ्याभिः वाग्भिः - பிரார்த்தனையுடனும், तुष्टुवुः - துதித்தனர்.

(பொருள்) எல்லையற்ற கருணைக் கடலானவனே ! உலகத்தின் நாயகனே ! ஜகத்தை காக்கும் ரட்சகனே ! தேவலோக வ்ருக்ஷத்தின் நிழலில் வீற்றிருக்கக்கூடிய சிவனை பக்தியுடனும், துதித்தும், போற்றியும், இறைவனை எப்பொழுதும் பூஜைசெய்து, அபிஷேகம் செய்தால் நமக்கு இறைவனின் (ஈச்வரனின்) அருள் கிட்டும்.

तवाङ्घ्रिपङ्केरुहयोगमाध्वी धारास्ससारमयीन्द्र भृङ्गाः ।
सुरेन्द्रराज्यस्तबकं निरस्यन् कर्तुं च हर्तुं जगदीशते सः ।। 34

தவாங்க்ரிபங்கேருஹயோகமாத்வீ தாராஸ்ஸஸாரமயீந்தர: ப்ருங்கா: ।
ஸுரேந்த்ரராஜ்யஸ்தபகம் நிரஸ்யன் கர்தும் ச ஹர்தும் ஜகதீசதே ஸ: ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

तवाङ्घ्रिपङ्केरुहयोगमाध्वीधारास्ससस्तारमयीन्द्र भृङ्गः - உன் திருவடித்தாமரைகளின் சேர்க்கையில் சேர்ந்துள்ள மதுவாகிற தேன் தாரையாக பெருக்கெடுக்க அந்த ரஸத்தைப் பருக வந்த வண்டாகிற தேவேந்திரன், सुरेन्द्रराज्यस्तबकम् - இந்திரனுடைய ராஜ்ய சபையில் கூறப்படும் பெருமையையும் புகழையும், हर्तु- அபஹரிக்கவும், निरस्यन् - தோற்கடிக்க, कर्तुं च - செய்யவும், सः - அந்த மஹாதேவன், जगत् ईशते - உலகத்தை ஆட்சி செய்கிறான்.

(பொருள்) உன் திருவடித்தாமரைகளின் சேர்க்கையில் சேர்ந்துள்ள மதுவாகிற தேன் தாரையாக பெருக்கெடுக்க அந்த ரஸத்தைப் பருக வந்த வண்டாகிற தேவேந்திரன் (இந்திரன்), அவனுடைய ராஜ்ய சபையில் அவனுடைய புகழைப் பாடமுடியாமல் செய்யவும், அபகரிக்கவும், தோற்கடித்து உலகத்தை ஆள்வது அந்ததேவனின் விருப்பமாகும்.

चिराय संसार महातपेन संतप्तमात्रः खलुकां दिशीकः ।
दैवात्तवाङ्घ्री यदि संस्मरेत् छायां ददात्येवहि चन्द्रभानोः ।।35

சிராய ஸ்ஸார மஹாதபேன ஸ்தப்தமாத்ர: கலுகாம் திசீக: ।
தைவத்தவாங்க்ரீ யதி ஸம்ஸ்மரேத் சாயாம் ததாத்யேவஹி
சந்த்ரபானோ: ॥ 35

चिराय - வெகுகாலம், संसारमहातपेन - ஸம்ஸாரம் என்கிற நெருப்பில், संतप्तगात्रः - நன்றாக காய்ச்சப்பட்ட சரீரத்துடன், कलकां दिशीकः - ஓடிப்போனான், दैवात् - தெய்வ வசத்தால், ताङ्घ्री - உன்னுடைய திருவடிகளை, यदि संस्मरेत् - ஒரு பொழுது நினைத்தால், चन्द्रभानोः - சூரிய சந்திரனுக்கும், छायां - நிழலை, ददात्येव हि - நிழலை கொடுக்கக்கூடியவரன்றோ !

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

(பொருள்) சிலகாலமாகவே (வெகுகாலமாக) ஸம்ஸாரமாகிற (வெப்பத்தால்) நெருப்பினால் காய்ச்சப்பட்ட சரீரத்தையுடையவன் கஷ்டமிகுதியால் திசை தெரியாமல் ஓடுபவன் தெய்வ வசத்தால் ஒருமுறை உன் திருவடிகளை நினைத்தாலே போதும் சூரிய சந்திரர்களுக்கு நிழலைக்கொடுப்பவன் இப்படிப் பட்டவனுக்கு அருள் செய்யமாட்டானா !

नरादि विध्यन्तसुखेषु वाञ्छां विसृज्य सर्वान् परिहृत्य बन्धान् ।
त्वत्पादसन्दर्शनबन्धभावास्तपोगुहा सुप्रचरन्ति धीराः ।। 36

நராதி வித்யந்தஸுகேஷு வாஞ்சாம்விஸ்ருஜ்ய ஸர்வான் பரிஹ்ருத்ய பந்தான் ।
த்வத்பாதஸந்தர்சனபந்தபாவாஸ்தபோகுஹை ஸுப்ரசரந்தி தீரா: ॥ 36

नरादिविध्यन्तसुखेषु – மனிதன் முதல் பிரம்மா வரையுள்ள சுகங்களில், वाञ्छां विसृज्य – விரும்பாது, सर्वान् बन्धान् – எல்லாவித தொடர்புகளையும், परिहृत्य – அறுபடும்படி செய்து (அறுத்து), त्वत्पादसन्दर्शन बन्धभावाः – உன் திருவடி தரிசனம் காரணமாக சுகத்துடன் பந்த பாவங்கள் எல்லாம், तपोगुहाः – தவம் என்கிற தபக்குகையில், धीराः – விழிப்புற்றவர்களான தீரர்கள், सुप्रचरन्ति – சஞ்சரிக்கின்றனர்.

(பொருள்) மனிதன் முதல் பிரம்மா வரையுள்ள அனைத்து ஜீவராசிகளின் சுகங்களிலுள்ள எல்லாவித பந்தபாச தொடர்புகளை அறுத்து உன் திருவடியின் தரிசனத்திற்காக குகையில் தவம் மேற்கொண்டு இதையே பந்தமாக பாவித்து சம்சாரத்திலிருந்து விழித்துக் கொண்டவர்களே தீரர்களாக இருக்கின்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

धर्मार्थकामेषु निविष्टचित्ता भजन्ति ते नाम बहुप्रकारम् ।
ततो लभन्ते च फलानि भूयो श्रमन्ति नेछन्ति भवन्तमीड्यम् ।।37

தர்மார்த்தகாமேஷு நிவிஷ்டசித்தா பஜந்தி தே நாம
பஹுப்ரகாரம் ।
ததோ லபந்தே ச பலானி பூயோ ச்ரமந்தி நேசந்தி
பவந்தமீட்யம் ॥ 37

धर्मार्थकामेषु - அறம், பொருள், இன்பம், வீடு போன்றதான இவற்றில், निविष्टचित्ता - ஈடுபட்ட மனதுடன், ते - உன்னை, बहुप्रकारम् - பலவாறு, भजन्ति नाम - வழிபடுகின்றனர், ततः - பிறகு, फलानि च - பலன்களையும், लभन्ते - அடைகின்றனர், भूयः - மீண்டும், श्रमन्ति - கஷ்டப்படுகின்றனர், ईड्यम् - துதிக்கத்தக்க, भवन्तम् - உம்மை, नेच्छन्ति - விரும்பாமலா இருப்பார்.

(பொருள்) அறம், பொருள், இன்பம், வீடு போன்றதான இவற்றில் ஈடுபட்ட மனதுடன் போன்ற காலங்களில் உன்னை பலவாறு வழிபடுகின்றனர். அவர்கள் நற்பலன்களையும் அடைகின்றனர். இறைவனைத் துதிக்கத்தக்க உம்மை விரும்பாமலா இருப்பார்.

त्वमेव हेतुर्न परोस्ति काश्चत् त्वद्धर्शने दीप इव स्वबुद्धौ ।
विना कटाक्षं तव केशवो वा पितामहो वा न च वीक्षते त्वाम् ।। 38

த்வமேவ ஹேதுர்ன பரேஸ்தி காச்சத் த்வத்தர்சனே தீப இவ
ஸ்வபுத்தௌ ।
வினா கடாக்ஷம் தவ கேசவோ வா பிதாமஹோ வா ந ச
வீக்ஷதே த்வாம் ॥ 38

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

त्वमेव - நீரே, हेतुः - எல்லாவற்றிற்கும் காரணம், परः कश्चित् - வேறு ஒருவர், न अस्ति - கிடையாது, त्वद्दर्शने - உன்னை பார்ப்பதில், स्वबुद्धौ - புத்திக்கு, दीप इव - தீபம் போல, तव कटाक्षं - உன் கடாக்ஷம், विना - இன்றி, केशवो वा - கேசவனோ ! पितामहो वा - பிரம்மனோ, त्वाम् - உன்னை, न च वीक्षते - பார்க்க முடியாது.

(பொருள்) இறைவா ! எல்லாவற்றிற்கும் நீயே காரணமானவன். படைப்பில் சிறந்தவன். கருணைக் கடலே! தர்மத்தின் தலைவனே ! உன்னையன்றி வேறு ஒருவனாலும் செய்யமுடியாத படைப்பில் தலைவனே ! உன்னைப் பார்ப்பதில் தன்னுடைய புத்திக்கு தீபம் போல (தீப விளக்கு) உன் அருளின்றி கேசவனே ! பிரம்மனோ ! உன்னை பார்க்க முடியாது. உன்னை எதுவும் செய்ய முடியாது.

सूत उवाच –

एवं स्तुतो महादेवस्तानुवाचकृपानिधिः ।
प्रीतोस्मि युष्मत्तपसा भक्त्यारब्धस्तवन च ।। 39

ஸூத உவாச-

ஏவம் ஸ்துதோ மஹாதேவஸ்தானுவாசக்ருபாநிதி: ।
ப்ரீதோஸ்மி யுஷ்மத்தபஸா பக்த்யாரப்தஸ்தவேன ॥ 39

सूत उवाचः - **சூதர் கூறினார்**

एवं - இவ்வாறாக, स्तुतः - துதிக்கப்பட்ட, कृपानिधिः - கருணைக்கடலான, महादेवः - மஹாதேவன், तान् - அவர்களைப் பார்த்து, उवाच - கூறினார், युष्मत् - உங்களுடைய, तपसा - தவத்தாலும், भक्त्यारब्धस्तवेन च - பக்தியுடன் செய்த துதியாலும், प्रीतः - சந்தோஷமடைந்தவனாக, अस्मि - இருக்கிறேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

(பொருள்) ஸூத பௌராணிகர் இவ்வாறு கூறினார். பக்தியுடன் துதிக்கப்பட்ட கருணைக்கடலான மஹாதேவன் அவர்களைப் பார்த்து கூறினார். உங்களுடைய தவத்தாலும், பக்தியுடன் செய்த துதியாலும் (பூஜையாலும்), அவ்வாறு சந்தோஷமடைந்தான் என்றும்பக்தியுடனும் செய்தவை நற்பலன்களையும், சந்தோஷத்தினையும் கொடுக்கும். அவ்வாறு செய்தால் சந்தோஷம் அடைவேன் என்றார்.

वाञ्छितान् नागाः प्रयच्छन्त्यपि दुर्लभान् । 40

வாஞ்சிதான் நாகா: ப்ரயச்சந்த்யபி துர்லபான் ॥ 40

वाञ्छितान् - விரும்பியவற்றை, नागाः - நாகர்கள், दुर्लभान् अपि - கிடைக்க அரிதானதாக இருப்பினும், प्रयच्छन्ति - கொடுக்க வல்லவர்கள் ஆனார்கள்.

(பொருள்) தான் விரும்பியவற்றை நாகங்கள் கிடைக்க அரிதானதாக இருப்பினும் கொடுக்க வல்லவர் ஆனார்கள்.

नागाः ऊचुः -

त्राहि सर्पमहायज्ञाज्जनमेजयभूपतेः ।
कुटुम्बिनः सभृत्यान्नः कृपया परया विभो ॥ 41

த்ராஹி ஸர்பமஹாயக்ஞாஜ்ஜனமேஜயபூபதே: ।
குடும்பின: ஸப்ருத்யான்ன: க்ருபயா பரயா விபோ ॥ 41

नागाः ऊचुः - *நாகங்கள் கூறினார்கள்*

विभो -ஹே பிரபுவே ! जनमेजय भूपतेः-ஜனமேஜய மன்னின், सर्पमहायज्ञात् - பெரிய சர்ப்ப யாகத்திலிருந்து, सभृत्यात्- வேலைக் காரர்களுடன் இருக்கக்கூடிய, कुटुम्बिनः- குடும்பங்களான, नः- எங்களை, परया कृपया-மிகுந்த கருணையுடன், त्राहि- காப்பாற்றுவீர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

(பொருள்) நாகங்கள் கூறினார்கள். ஹே பிரபுவே! ஜனமேஜய மன்னர் செய்யக்கூடிய மஹா சர்ப்ப யாகத்திலிருந்து வேலைக்காரர்களுடன் சேர்ந்து இருக்கக்கூடிய எங்களின் பல குடும்பங்களை பெரிய யாகத்திலிருந்து காப்பாற்றுவீராக !

अनारब्धोस्तु यज्ञोऽयमारब्धोप्यस्तु विघ्नभाक् ।
वरमेवं प्रयच्छेश त्वं हि नः परमागतिः ।। 42

அனாரப்தோஸ்து யக்ஞேயமாரப்தோப்யஸ்து விக்னபாக் ।
வரமேவ் ப்ரயச்சேச த்வம் ஹி ந: பரமாகதி: ॥ 42

अयं यज्ञः - இந்த யாகமானது, अनारब्धः अस्तु - ஆரம்பிக்காவிட்டால் என்ன? आरब्धः अस्तु - ஆரம்பித்தால் என்ன? अपि - எப்படி இருந்தாலும், विघ्नभाक् - இடையூறு ஏற்படும்படியாக, ईश - ஈசனே! एवं वरं - இவ்வாறு ஒரு வரத்தை, प्रयच्छ - கொடுங்கள், त्वं हि - தாங்கள் தான், नः - எங்களுக்கு, परमागतिः - புகலிடம் பெறுவார்.

(பொருள்) எந்த இடையூறுகள் இருந்தாலும் எந்த யாகமானது ஆரம்பித்தாலும், ஆரம்பிக்காமல் விட்டாலும் அதைப்பற்றிய இடையூறுகள் ஏற்படும்படியாக இருந்தாலும் எங்களுக்கு கவலையில்லை. ஈசனே ! ஒரு வரத்தை அருளுங்கள். நீங்கள்தான் எங்களுக்கு சரணாகதி கொடுத்து வரம் அளிப்பீராக !

शिव उवाच –

युष्मद्वंशे जरत्कारुर्नाम्ना कन्या भविष्यति ।
जरत्कारुर्मुनिस्तस्यामास्तिकं जनयिष्यति ।। 43

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

சிவ உவாச-

யுஷ்மத்வமசே ஜராகாருர்நாம்னா கன்யா பவிஷ்யதி ।
ஜராகாருர்முனிஸ்தஸ்யாமாஸ்திகம் ஜனயிஷ்யதி ॥ 43

युष्मद्वंशे - உங்களது வம்சத்தில், जरत्कारु - ஜரத்காரு என்ற, नाम्ना - பெயரில், कन्या - ஒரு பெண், भविष्यति - தோன்றுவாள், जरत्कारु - ஜரத்காரு என்ற, मुनिः - முனிவர், तस्याम् - அவளிடத்தில், आस्तिकम् - ஆஸ்திகத்தை, जनयिष्यति - ஏற்படுத்துவார்.

(பொருள்) சிவன் கூறினார். உங்கள் வம்சத்தில் ஜரத்காரு என்ற பெயரில் ஒரு பெண் தோன்றுவாள். அதுபோல ஜரத்காரு என்ற பெயரில் ஒரு முனிவர் ஆஸ்தீகத்தை ஏற்படுத்துவார் என்று அந்த ஈச்வரன் கூறினார்.

स दौहित्रो यज्ञविघ्नकारिष्यत्येव धार्मिकः ।
द्वापरान्ते भवेद्यज्ञस्तावत् न भयं क्वचित् ।। 44

ஸ தௌஹித்ரோ யக்ஞவிக்னகாரிஷ்யத்யேவ தார்மிக: ।
த்வாபராந்தே பவேத்யஞஸ்தாவத் ந பயம் க்வசித் ॥ 44

स दौहित्रः - அந்த பெண்ணின் மகனான (தௌஹித்ரன்), धार्मिकः - தார்மிகன், यज्ञविघ्नं - யாகத்தில் இடையூறு, करिष्यत्येव - கண்டிப்பாக செய்வான், यज्ञः - யாகமானது, द्वापरान्ते - துவாபர யுகத்தின் கடைசியில், भवेत् - நடக்கும், तावत् - அதுவரை, न भयं क्वचित् - பயப்படவேண்டாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

(பொருள்) அந்த பெண்ணின் மகனான (தௌஹித்ரன்) தார்மீகன் யாகம் முழுமையடையாமல் இருக்க அந்த யாகத்தில் இடையூறுகள் செய்வான். யாகமானது முடிவில் (இறுதியில், கடைசியில்) நடைபெறும். அதற்கான வழிகள் செய்யப்பட்டது. அதுவரை பயப்படவேண்டாம்.

यदोपक्रमते तन्तुं स राजा जनमेजयः ।
तदैतत्कमलाक्षेत्रं भवन्तःपन्नगोत्तमाः ।। 45

யதோபக்ரமதே தந்தும் ஸ ராஜா ஜனமேஜய: ।
ததைதத்கமலாக்ஷேத்ரம் பவந்த: பன்னகோத்தமா: ॥ 45

यदा - எப்பொழுது, स राजा - அந்த ராஜா, जनमेजयः - ஜனமேஜய:, तन्तुं - நூல்போல வம்ச தர்மமாக, उपक्रमते - யாகம் செய்ய தொடங்குவானோ, तदा - அப்பொழுது, एतत् कमलाक्षेत्रम् - இந்த கமலா க்ஷேத்திரத்தில், पन्नगोत्तमाः - நாகச்ரேஷ்டர்களே, भवन्तः - நீங்கள், (निवसन्तु) - தங்கி இருங்கள்.

(பொருள்) ராஜா ஜனமேஜயன் நூல் போல வம்ச பாரம்பர்யமான யாகம் பண்ணத் தொடங்குகிறானோ அவ்வாறு யாகம் தொடங்கும்போது நாக குடும்பங்களான நீங்கள் உங்களுக்கு பாதுகாப்பாக கமலாலயத்திற்கு சென்று தங்கி இருங்கள்.

परिवारकुलैस्सार्धमागता निवसन्तु वै ।
न यज्ञाद्वैनतेया द्वापरेभ्यो वा न वो भयम् ।। 46

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

பரிவாரகுலைஸ்ஸார்தமாகதா நிவஸந்து வை ।
ந யக்ஞானதேயா த்வாபரேப்யோ வா ந வோ பயம் ॥ 46

परिवारकुलैः सार्धं – பரிவாரத்துடனும், குடும்பத்துடனும், आगताः – வந்துள்ளீர்கள், निवसन्तु वै – நிச்சயம் வசியுங்கள் (இருங்கள்), यज्ञाद्वा – யாகத்தினாலோ, वैनतेयाद्वा – கருடனாலோ, अपरेभ्यो वा – மற்றவர்களினாலோ, वः – உங்களுக்கு, न भयम् - பயம் வேண்டாம்.

(பொருள்) பரிவாரத்துடனும், குடும்பத்துடனும் நீங்கள் (நாகங்கள்) வந்துள்ளீர்கள். கமலாலயத்தில் நிச்சயமாக இருங்கள். யாகத்தினாலோ, கருடனாலோ மற்றவர்களினாலோ, உங்களுக்கு பாதுகாப்பான இடம் கமலாலயம். அது ஈசனின் இடமாகும். உங்களை யாராலும் ஒன்றும் செய்யமுடியாது. அதனால் கமலாலயத்தில் தங்கி இருங்கள்.

मत्प्रसादाद्दवराजः सहायश्च भविष्यति ।
भविष्यति तदा क्षेमो दौहित्रमहिमोदितः ।। 47

மத்ப்ரஸாதாத்தவராஜ: ஸஹாயச்ச பவிஷ்யதி ।
பவிஷ்யதி ததா க்ஷேமோ தௌஹித்ரமஹிமோதித: ॥ 47

मत्प्रसादात् – என் அருளால், देवराजः – தேவேந்திரன், सहायश्च – உதவி புரிவதற்காக, भविष्यति – வருவான் (இருப்பான்), तदा – அப்பொழுது, दौहित्रमहिमोदितः - தௌஹித்ரனின் மஹிமையாக, क्षेमः – நன்மை, भविष्यति - ஏற்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

(பொருள்) என் அருளால் தேவேந்திரன் உங்களுக்காக உதவி புரிவதற்காக வருவான். அப்பொழுது தௌஹித்தரனின் மஹிமையாக நன்மை ஏற்படும். உங்களின் பாதுகாப்பாக தேவேந்திரன் நன்மை ஏற்படும் வகையில் உதவி புரிவான். நாக குடும்பங்களே பயம் வேண்டாம். என்னுடைய கமலாலயத்தில் தங்கி இருங்கள்.

इत्युक्त्वान्तर्दधे शम्भुः पश्यतां फणिनां तथा ।
तेऽपि भोगवतीं गत्वा रेमिरे विगतज्वराः ॥ 48

இத்யுக்த்வாந்தர்ததே சம்பு: பச்யதாம் பணினாம் ததா ।
தேடபி போகவதீம் கத்வா ரேமிரே விகதஜ்வரா: ॥ 48

इति - இவ்வாறு , उक्त्वा - கூறி, चम्भुः - சிவன், पश्यतां - பார்த்துக்கொண்டிருக்கும்போது, फणिनां - நாகங்களின் முன்னாடி, तथा - அப்படியே, अन्तर्दधे - மறைந்தார், तेऽपि - அவர்களும்கூட, भोगवतीं - போகவதீ என்ற இடத்திற்கு, गत्वा - சென்று, विगतज्वराः - பயம் என்ற ஜ்வரம் நீங்கியவர்களாக, रेमिरे - சந்தோஷித்தனர்.

(பொருள்) சிவன் பார்த்துக்கொண்டிருக்கும்போது நாகர்களின் முன்னாடி அப்படியே மறைந்தார். அவர்களும் கூட போகவதீ என்ற இடத்திற்கு சென்று பயம் என்ற ஜ்வரம் நீங்கியவர்களாக சந்தோஷமாக இருந்தனர். கமலாலயத்தில் நாகர்கள் பாதுகாப்புடன் உள்ளனர்.

पुनश्च द्वापरान्ते श्रीवाल्मीकक्षेत्रमागताः ।
बन्धुभिः परिवारैश्च निवसन्तो यथासुखम् ॥ 49

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

புனச்ச த்வாபராந்தே ஸ்ரீவால்மீகக்ஷேத்ரமாகதா: ।
பந்துபி: பரிவாரைச்ச நிவசந்தோ யதாசுகம் ॥ 49

पुनच्च - மறுபடியும், द्वापरान्ते - துவாபரக்கடைசியில், श्रीवाल्मीकक्षेत्रम् - ஸ்ரீவால்மீகி க்ஷேத்திரத்திற்கு, आगताः- வந்தார்கள், बन्धुभिः - உறவினர்களுடனும், परिवारैश्च - பரிவாரங்க ளுடனும் (குடும்பம்), यथासुखम् - சுகமாக, निवसन्तः - வசித்துவந்தார்கள்.

(பொருள்) துவாபரக் கடைசியில் ஸ்ரீவால்மீகி க்ஷேத்திரம் வந்தார்கள். தங்களின் உறவினர்களுடனும், தங்களின் குடும்பங்களுடனும் வல்மீகி க்ஷேத்திரம் வந்து அடைந்தார்கள். அங்கு பாதுகாப்புடனும், நிம்மதியாகவும், சுகமாகவும், சந்தோஷமாகவும் க்ஷேத்திரத்தில் வாழ்ந்தார்கள்.

इन्द्रेण पालिता श्चासनास्तिकेन च तारिताः ।
पुत्रपौत्रैर्वृताः पश्चात्स्वराज्यं प्रतिपेदिरे ॥ 50

இந்த்ரேண பாலிதா ச்சாஸனாஸ்திகேன ச தாரிதா: ।
புத்ரபௌத்ரர்வ்ருதா: பச்சாத்ஸ்வராஜ்யம் ப்ரதிபேதிரே ॥ 50

इन्द्रेण - இந்திரனால், पालिताश्च - காப்பாற்றப் பட்டவர்களும், आस्तिकेन च - ஆஸ்திகனால் கரை சேர்க்கப் பட்டவர்களுமான நாகர்கள், पुत्रपौत्रैर्वृताः - பிள்ளை, பேரன் இவர்களுடன், स्वराज्यं - தன்னுடைய ராஜ்யம், प्रतिपेदिरे - பெற்றிட ஆயினர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

(பொருள்) இந்திரனால் காப்பாற்றப்பட்டவர்களும், ஆஸ்திகனால் கரை சேர்க்கப்பட்டவர்களுமான நாகங்கள் கமலாலய க்ஷேத்திரத்தில் தங்களின் பிள்ளைகள், பேரன் பேத்திகள் சூழ தங்களுடைய ராஜ்யம் அடைந்தார்கள். அவ்வாறு அச்க்ஷேத்திரம் அவர்களுக்கு பாதுகாப்பு அளித்ததோடு இந்திரனால் காப்பாற்றப்பட்டவரு மாயினர்.

तदारभ्याहीशकुटिरिति नामस्य विश्रुतम् ।
आख्यानमेतत्पठतां सर्वकामफलप्रदम् ।। 51

ததாரப்யாஹீசகுடிரிதி நாமஸ்ய விச்ருதம் ।
அக்யானமேதத்படதாம் ஸர்வகாமபலப்ரதம் ॥ 51

तदारभ्य - அன்று முதல் (நாகங்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய), अस्य - இந்த இடத்திற்கு, अहीशकुटिः - அஹீசகுடி, नाम - என்ற பெயர், विश्रुतम् - பேசப்பட்டது (புகழப்பெற்றது), एतत् - இந்த, आख्यानं - கதை, पठताम् - படிப்பவர்களுக்கு, सर्वकामफलप्रदम् - எல்லாவிதமான நன்மைகளையும், பலன்களையும், புண்ணியத்தையும் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

(பொருள்) நாகங்கள் கமலாலய க்ஷேத்திரத்தில் வாழ ஆரம்பித்த அன்று முதல் அந்த இடத்திற்கு அஹீசகுடி என்ற பெயர் ஏற்பட்டது. (புகழ் பெற்ற பேசப்படுகிறது) நாகங்களின் இருப்பிடமாக காணப்பட்டதால் அப்பெயர் பெற்றது. இந்த கதையை படிப்பவர்களுக்கு எல்லாவிதமான நன்மைளையும், பலன்களையும், புண்ணியத்தையும் கொடுக்கக்கூடியதாக இருக்கும். (இச்சுலோகத்தில் அஹீசகுடி பெயர் வரக்காரணம் கூறப்பட்டுள்ளது)

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

आयुष्यमारोग्यमकीर्तिनाशनं धन्यं यशस्यम् ।
कलिकल्मषापहं पठन्ति शृण्वन्ति च ये नरोत्तमाः ते
प्राप्नुयुः शङ्करसत्कटाक्षात् ।। 52

इति ब्रह्मकैवन्तै नागरखण्डे
अहीसकुटिमाहात्म्ये चतुर्थोऽध्यायः

ஆயுஷ்யமாரோக்யமகீர்திநாசனம் தன்யம் யசஸ்யம் ।
கலிகலமஷாபஹம் படந்தி ச்ருண்வந்தி ச யே நரோத்தமா:
தே ப்ராப்னுயு: சங்கரஸத்கடாக்ஷாத் ॥ 52

ये नरोत्तमाः – *(இந்த கதையை) எந்த மனித சிரேஷ்டர்கள்,* पठन्ति – *படிக்கிறார்களோ,* शृण्वन्ति – *கேட்கிறார்களோ,* ते – *அவர்கள்,* शङ्करसत्कटाक्षात् – *சங்கரனுடைய கடாக்ஷத்தினால்,* आयुष्यं – *நீண்ட ஆயுளையும்,* आरोग्यं – *ஆரோக்யத்தையும்,* अकीर्तिनाशनं – *கெட்ட பெயர் நீங்கியும்,* धन्यं – *பணம் படைத்தவர்களாகவும்,* यशस्यम् – *புகழ் பெற்றவர்களாகவும்,* कलिकलमशापहं च – *கலியுக பாபம் நீங்கியவர்களாகவும்,* प्राप्नुयुः– *ஆவார்கள்.*

(பொருள்) இக்கதையை எந்த நல்ல மனிதர்கள், படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அவர்கள் ஸ்ரீசங்கரனின் அருளால், நீண்ட ஆயுள், ஆரோக்யம், கெட்ட பெயரின் அழிவு, செல்வம், புகழ், பெற்றவர்களாகவும், கலியுக பாபம் நீங்கியவர்களாகவும் ஆவார்கள். அவ்வாறு தோஷமின்றி வாழலாம். பக்தியுடன் இருந்தால் ஈச்வரனின் அருள் என்றும் நிலைத்து நிற்கும்.

ப்ரம்ம கைவர்த்தத்தில் நாகரகாண்டத்தில் அஹிஸகுடி மாஹாத்மியத்தில்
நான்காவது அத்தியாயம் முடிவடைகிறது

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

पञ्चमोऽध्यायः

ஐந்தாம் அத்தியாயம்

ऋषयः ऊचुः –

आश्चर्यं चरितं श्रोतृजनतानन्दवर्धनम् ।
श्रुत्वेदमृषिभिः साकं वयमानन्दनिर्भराः ।। 1

ரிஷய: ஊசு: -

ஆச்சர்யம் சரிதம் ச்ரோத்ருஜனதானந்தவர்தனம் ।
ச்ருத்வேதம்ருஷிபி: ஸாகம் வயமானந்தநிர்பரா: ॥ 1

ऋषयः ऊचुः – *ரிஷிகள் கூறினார்*

